**அனுப்புநர்**

சா. சேதுராமவர்மா,

அரசுத் தேர்வுகள் இயக்குநர்,

**சென்னை** - 600 006.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்.** 002276 / F1 / 2022 **நாள்** : 15.02.2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்** : மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் மற்றும் முகப்புத்தாட்கள் வழங்குவதற்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

*****

மார்ச் / ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மைவிடைத்தாட்கள், முகப்புத்தாட்களை உதவி இயக்குநர்கள் 20.02.2023 **முதல் 23.02.2023 வரையிலான நாட்களில்** சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்கி தைக்கும் பணியினை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மார்ச் / ஏப்ரல் 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாட்களின் வகைகள் மற்றும் முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய வரைகட்டத்தாள், வரைபடங்கள் விவரம் ஆகியவை தேர்வு மையங்களுக்கு வழங்கும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகிறது.

<u>**இணைப்பு**</u>:மேற்குறிப்பிட்டவாறு

**ஒம்**/-

**இயக்குநர்**

<u>**நகல்**</u>:

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – இவ்விவரத்தினை அனைத்து மேல்நிலை தேர்வு மையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
3. கண்காணிப்பாளர், 'K' பிரிவு (அலுவலகம்).

## மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு – மார்ச்/ ஏப்ரல் 2023

## விடைத்தாட்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள்

### மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு முதன்மை விடைத்தாள்

1. மொழிப்பாடங்களுக்கான (Language and English) முதன்மை விடைத்தாள் 30 பக்கங்கள் புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட விடைத்தாளில் எழுதும் வகையில் கொடுக்கப்பட வேண்டும்.

   மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு HSE FIRST YEAR - LANGUAGE என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளை தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

   தேர்வர்கள் மொழிப்பாடங்களுக்கு கூடுதல் விடைத்தாள் கோரினால் புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

2. உயிரியல் பாடத்தைப் பொறுத்தவரையில், உயிரி-தாவரவியல் மற்றும் உயிரி-விலங்கியல் என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இரண்டு முதன்மை விடைத்தாட்கள் வழங்கப்படும். ஆனால் **ஒரே ஒரு Top sheet மட்டுமே வழங்கப்படும்**.

   மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு HSE FIRST YEAR - BIO - BOTANY & HSE FIRST YEAR - BIO – ZOOLOGY என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளை தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

### முகப்புத்தாள் மற்றும் முதன்மை விடைத்தாட்கள் தைக்க வேண்டிய முறை

1. முதலில் முகப்புத்தாள் வைக்கப்பட வேண்டும்.
2. அதன் கீழ் HSE FIRST YEAR - BIO - BOTANY முதன்மை விடைத்தாள் வைக்கப்பட வேண்டும்
3. அதன் கீழ் Bio-Botany பாடத்திற்கென பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கோடிடப்படாத வகையிலான 4 பக்கங்கள் கொண்ட ஒரே ஒரு கூடுதல் விடைத்தாள் மட்டுமே வைக்கப்பட வேண்டும்.
4. அதன் கீழ் HSE FIRST YEAR - BIO - ZOOLOGY முதன்மை விடைத்தாள் வைக்கப்பட வேண்டும்.

மேற்படி 4 பகுதிகளையும் ஒன்றாகத் தைத்து ஒரே விடைத்தாள் புத்தகமாக தேர்வர்களுக்கு வழங்க வேண்டும். BIO-ZOOLOGY பாடத்திற்குத் தேர்வர்கள் கோரினால் கூடுதல் விடைத்தாட்கள் வழங்கலாம். அவ்வாறு பெற்றுப் பயன்படுத்தப்படும் BIO-ZOOLOGY பாட கூடுதல் விடைத்தாளானது, மேற்படி விடைத்தாள் புத்தகத்தின் அடியில் வைத்துத் துளையிட்டு நூல் கொண்டு இணைத்துக் கட்டப்பட வேண்டும். இது குறித்துத் தெளிவான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

3. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் கணக்குப் பதிவியல் (Accountancy) பாடத்திற்கான விடைத்தாள் 1 முதல் 14 பக்கங்கள் கோடிடப்படாமலும், மீதமுள்ள பக்கங்கள் கோடிடப்பட்டும் இருக்கும்.

   மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு HSE FIRST YEAR - ACCOUNTANCY என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளை தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

   மேலும் கணக்குப் பதிவியல் (Accountancy) பாடத்தேர்விற்கு பிரத்யேகமாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்பட வேண்டும்.

4. மேல்நிலைத்தேர்வில் இதரப் பாடங்களுக்கு (கணினி அறிவியல் பாடம் உட்பட) 30 பக்கங்கள் அடங்கிய HSE FIRST YEAR - MAIN என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளை தேர்வர்களுக்கு வழங்க வேண்டும்.

5. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் தேர்வு நடைபெறுவதற்கு முன்னதாக தேவையான கூடுதல் விடைத்தாட்கள் இருப்பில் வைத்திருக்கவேண்டும். தேர்வெழுதும் தேர்வர்கள் முதன்மை விடைத்தாட்கள் முழுவதும் எழுதிய பிறகு கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்பட வேண்டும்

6. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் வரலாறு பாடத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு பண்டைய கால இந்திய வரைபடத்தினை (One Ancient India Map) கடைசி தாளுக்கு முன்னர் வைத்துத் தைத்து வழங்கப்படவேண்டும்.

7. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் புவியியல் பாடத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு உலக புறவரி வரைபடத்தினை (One World Outline Map) கடைசி தாளுக்கு முன்னர் வைத்துத் தைத்து வழங்கப்படவேண்டும்.

8. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் (Business Mathematics and Statistics) பாடத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் ஒரு வரைகட்டத்தாளினை (Graph Sheet) விடைத்தாளின் கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்க வேண்டும்.

9. மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் புள்ளியியல் (Statistics) பாடத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு முதன்மை விடைத்தாளுடன் ஒரு வரைகட்டத்தாளினை (Graph Sheet) கடைசித் தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்க வேண்டும்

10. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் சிறப்பு உறைகளைப் பொறுத்தமட்டில் 20 விடைத்தாட்களுக்கு ஒரு சிறப்பு உறை என்ற வீதத்தில் கணக்கிட்டு வழங்கப்படவேண்டும். மொழிப்பாடங்களுக்கு மொழி வாரியாக சிறப்பு உறைகள் பயன்படுத்த வேண்டும். பிற பாடங்களுக்கு பயிற்று மொழிவாரியாக தனித்தனி உறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

<u>கூடுதல் விடைத்தாட்கள் குறித்த அறிவுரை:-</u>

கோடிட்ட/ புள்ளியிடப்பட்ட முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிட்ட / புள்ளியிடப்பட்ட கூடுதல் விடைத்தாட்களையும், கோடிடப்படாத முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிடப்படாத கூடுதல் விடைத்தாட்களையும் பயன்படுத்த வேண்டும். மேலும் கணக்குப்பதிவியல் தேர்விற்கு பிரத்யேகமாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் (Accountancy Additional) வழங்கப்பட வேண்டும்.

11. <u>முகப்புத் தாட்கள் தைக்கும் முறை</u>

மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் அன்னார் தேர்வெழுதும் பாடம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான முகப்புச்சீட்டுகள் (Topsheets) வழங்கப்பட்டுள்ளன. அம்முகப்புச்சீட்டுகளை தையல் இயந்திரத்தின் உதவியுடன் 16-ம் எண் ஊசியைப் பயன்படுத்தி வெள்ளை நிற 3ply நூல் (cotton) கொண்டு "6 SPI" (Stitches Per Inch) என்ற அளவில் தைக்க வேண்டும்.

12. மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் அனைத்து மேல்நிலை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரை தொடர்பு கொண்டு தேர்வுமையங்களுக்கான முதன்மை விடைத்தாள்கள் மற்றும் முகப்புச் சீட்டுகள் பெறப்பட்டுள்ளனவா மற்றும் அறிவுரைகளின்படி தைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.

<u>விடைத்தாள் வகை வாரியான பக்கங்கள் (+1) எண்ணிக்கை விவரப் பட்டியல்</u>

| SCRIPT CATEGORY | NO. OF PAGES +1 | TYPE |
|---|---|---|
| HSE FIRST YEAR -LANGUAGE | 30 | RULED / DOTTED |
| HSE FIRST YEAR -BIO BOTANY | 14 | UNRULED |
| Addl.Sheet (Unruled) | 04 | |
| HSE FIRST YEAR - BIO ZOOLOGY<br>*Stitched together | 14 | UNRULED |

| | | |
|---|---|---|
| HSE FIRST YEAR - ACCOUNTANCY | 30 | 1-14 UNRULED<br>15-30 Account Sheets |
| HSE FIRST YEAR - MAIN | 30 | UNRULED |

**<u>கூடுதல் விடைத்தாள் பற்றிய விவரம் :</u>**

| | | |
|---|---|---|
| ADDITIONAL SHEET | 4 | UNRULED<br>(to be used only for Unruled main sheet using subjects) |
| ADDITIONAL SHEET | 4 | RULED<br>(to be used only for Ruled main sheet using subjects) |
| ADDITIONAL SHEET<br>(for HSE Accountancy Subject) | 4 | RULED (Balance Sheet ) (to be used only for Accountancy subject working) |

## Map & Graph Sheet

**HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION, MARCH/ APRIL – 2023**

**NEW SYLLABUS**

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | One Graph Sheet. |
| Business Mathematics and Statistics | One Graph Sheet. |
| History | One Ancient India Map |
| Geography | One World Outline Map |

ஒம்/-

இயக்குநர்